<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.386 /2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 1  P.W.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மெய்ஞான மூர்த்தி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கந்தசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.03.2026.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் உடுமலைப்பேட்டை காந்தி நகர் தாராபுரம் ரோட்டில் வசித்து வருகிறேன். காளியம்மன் அன் கோ என்ற பெயரில் பொள்ளாச்சி உடுமலை சாலையில் தளி ரோடு சிக்னல் அருகில் வியாபாரம் செய்த வருகிறேன். காலை 9.00 மணிக்கு கடையை திறந்து இரவு 9.00 மணி வரை கடையை நடத்தி பூட்டி செல்வது வழககமாகும் கடந்த 25 வருடமாக வியாபாரம் செய்து வருகிறேன்.கடந்த 03.04.2025 ம் தேதியன்றுஇ ரவு 9.00 மணிக்கு வியாபாரம் முடித்து விட்டு கடையைபூட்டிவிட்டு சாவியை எடுத்து கொண்டு சென்று விட்டோம். மறுநாள் 04.04.2025 ம்தேதி காலை 9.00 மணிக்கு கடையில் வேலை செய்யும் ஆனந்த் மற்றும் கௌரிசங்கர் இருவரும் சாவியை பெற்று கொண்டு வந்து கடையை திறந்து பார்த்த போது கடையின் வெளிப்புற கதவில் இருந்த ஷட்டரை நெம்பி உடைக்கப்பட்டு திறந்து கிடப்பதாக என்னிடம் தொலைபேசியில் சொன்னார்கள், நான் தகவல் கிடைத்ததும் உடனடியாக கடைக்கு வந்து பார்த்தேன். அப்போது கடையின் டிராவில் வைத்திருந்த ரூ 19000/– பணமும்,

வாடிக்கையாளருக்கு பொருள் வாங்கினால் அவர்களுக்கு பரிசு கொடுப்பதற்காக 100 மில்லி அளவில் கோல்டு காயின் –158 எண்ணிக்கையில அதன் மொத்த எடை 2 பவுன் வைத்திருந்தது திருடப்பட்டிருந்தது மற்றும் வெள்ளி காசு 75 எண்ணிக்கையில் 75 கிராம் அளவு வெள்ளி காயின்களும் திருடப்பட்டிருந்தது.

2. பின்னர் நான் கடையில் இருந்த சிசிடிவி கேமராவை பார்த்த போது இரவு 1.00 மணிக்கு உள்ளே வந்த 30–40 வயது மதிப்புமிக்க ஒரு நபர் 04.04.2025 ம் தேதி அதிகாலை 1.00 மணி சுமாருக்கு கடையில் கிழுபுறம் உள்ள சுவற்றின் வழியாக ஏறி முதல் தளத்திற்கு வந்து சென்று அங்குள்ள ஜன்னல் கம்பியில் ஒரு கம்பியை உடைத்து கிழக்கு புறமாக உள்ள ஷட்டரை கம்பியால் நெம்பி உடைத்து உள்ளே நுழைந்து தங்க மற்றுமௌ வெள்ளி பொருட்களை திருடி கொண்டு அதிகாலை 4.00 மணிக்கு வந்த வழியாக சென்றது தெரியவந்தது. பின்னர் போலிசாருக்கு நான் டைப் செய்து புகார் கொடுத்தேன். புகார் நான் டைப் செய்தது தான். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரம் தெரியும். **புகார் அசா.ஆ .4 என குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் புகார் கொடுத்தது பின்னிட்டு போலிசார் அங்கு வந்து விசாரித்தனர். கைவிரல் ரேகை நிபுணர்கள் வந்து விசாரித்தார்கள். சிசிடிவி கேமரா பதிவுகளை சேகரித்து கொண்டார்கள். கைவிரல் ரேகை நிபுணர்கள் என்னிடமும், என் தம்பியிடமும், கடையில் வேலை செய்த வந்த அனைத்து ஊழியர்களிடமும் கைரேகை பெற்று கொண்டார்கள். போலிசார் 14.05.2025 ம் தேதி திருடிய நபரை கைது செய்ததாகவும் திருடிய சொத்துக்களை கைப்பற்றியதாகவும் சொன்னார்கள். காவல் நிலையம் வர சொன்னார்கள். நான் சென்று பார்தத போது சிசிடிவி கேமராவில் பதிவான நபரும் காவல நிலையத்தில் இருந்த நபரும் ஒரே மாதிரியான அடையாளத்துடன் இருந்தார்கள் என்பதை நானும் உறுதிசெய்து கொண்டு கூறினேன். திருட்டு போன பொருளை நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து பெற்று கொண்டேன். வெள்ளி மற்றும் தங்க நகைகள் கிடைத்து விட்டதாக போலிசார் சொன்னார்கள் . பணத்தை எதிரி அவரது காதலிக்கு செலவு செய்து விட்டதாக எதிரி கூறியதாக தெரிவித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வெள்ளி பொருட்கள் தான் நான் மனு தாக்கல் செய்து பெற்று கொண்ட நகைகள் ஆகும். வெள்ளி காயின்களின் புகைப்படம் எண்ணிக்கை அசா.ஆ.5 என குறியீடு செய்யப்படுகிறது. தங்க காயின்களின் புகைப்படம் எண்ணிக்கை

அசா.ஆ.6 என குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். திருடிய நபரை அடையாளம் தெரியுமா என்றால் தெரியும்

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நீங்கள் தான் உரிமையாளர் என்பதை சொல்ல ஆவணத்தை போலிசார் விசாரணையிலும் வழக்கு கோப்பிலும் சொல்லவில்லை என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை, அவர்கள் கேட்கவில்லை, நான் தரவில்லை, வேண்டுமென்றால் தற்போது தாக்கல் செய்கிறேன். தங்க காசு வெள்ளி காசு உங்களுடையது என்பதற்கான ஆதாரம் கொடுத்திர்களா என்றால் தங்க வெள்ளி காசுகளில் எங்கள் கடையின் டேக்குடன் இருந்தது அந்த டேக் கடையில் உள்ளது .நகைகளின் பில்கள் பற்றிபோலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் பில்கள் இல்லை, கடையின் டேக் தங்க மற்றும் வெள்ளி காயின்களில் உள்ளது. போலிசார் அது பற்றி கேட்கவில்லை. அதனால் நாங்கள் கொடுக்கவில்லை. சம்பவத்தை பற்றி நேரடியாக தெரியாது என்றால் நான் சிசிடிவி–யில் நேரடியாக பார்த்தேன். உங்கள் கடையில் நைட் வாட்ச்மேன் இருப்பார் என்றால் இல்லை. பொதுவாக பெரிய கடையில் வாட்ச் மேன் இருப்பார்கள் என்றால் எங்கள் கடையின் முன்பாக காவல் நிலையம் பூத் உள்ளது. பொருட்கள் டிவி பிரிட்ஜ் பொருட்களை திருடி செல்ல வாய்ப்பில்லை என்பதால் வாட்ச்மேன் வைக்கவில்லை, சின்ன பொருள் இருந்ததால் தான் எடுத்து சென்று விட்டார்கள்.
2. சம்பவ நடந்த இடத்திற்கு அருகில் போலிசார் சிக்னல் உள்ளது என்றாலும் போலிசார் அங்கு இருப்பார் என்றாலும் இரவு போலிசார் இருப்பதில்லை, பூத்தை மூடிவிட்டு செல்வார்கள் ரோந்து செல்லும் போலிசார் மட்டும் வருவார்கள். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. அந்த வழியாக ரோந்து காவலர்கள் பணியில் இருந்திருப்பார்கள் என்றால் அன்றைய தினம் இருந்தார்களா என்று தெரியவில்லை. கடையில் விலை உயர்ந்த பொருள் அதிகம் உள்ளது என்றால் சரிதான். அது எதுவும் காணாமல் போகவில்லை என்றால் ஆமாம். கடையில் தெப்ட் லாக் அலாரம் பொருத்திஉள்ளிர்களா என்றால் இல்லை சிசிடிவி கேமரா மட்டும் தான் உள்ளது. சிசிடிவி கேமராவில் பதிவாகும் பதிவுகள் உங்கள் மொபையில் வரும் என்றால் பதிவாகாது வேண்டுமென்றால் அவ்வப்போது டிவிஆர்–யில் பார்த்து கொள்ளலாம். வழக்கின் எதிரியை முன் பின் பார்த்ததில்லை என்றால் ஆமாம். போலிசார்

சொல்லி தான் எதிரியை தான் தெரியும என்றால் ஆமாம் சிசிடிவி கேமராவில் பார்த்துள்ளேன். பிடித்த வந்த பிறகும் பார்த்தேன். பொருட்கள் எத்தனை நாட்கள் கழித்து கிடைத்தது என்றால் 14.05.2025 ம் தேதியில் கிடைத்தது. உங்கள் பொருட்களை எங்கு வைத்து அடையாளம் காட்டினிர்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்த அடையாளம் காட்ட சொன்னார்கள நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்று கொண்டோம். போலிசார் உங்களை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2-3 முறை விசாரித்திருப்பார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் சம்பவ நடந்த போதும், சரியாக தேதி ஞாபகம் இல்லை. வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் சரியல்ல. சிசிடிவி கேமராவில் உள்ள நபருக்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி தான் அவர்.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 386/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. 11 P.W.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.03.2026.

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் நான் தற்போது ஈரோடு மாவட்டம் வரப்பாளையம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன் உடுமலைப்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 04.04.2025 ம் தேதி 11.30 மணியளவில் நான் நிலைய அலுவலில் இருந்த போது உடுமலை காந்தி சவுக் பகுதியில் வசிக்கும் எஸ் கே மெய்ஞானமூர்த்தி த/பெ. கந்தசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமாக பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 212/2025 சட்ட பிரிவுகள் 331(4), 305(a) BNS ன் படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அசல் புகாரையும் அசல் முதல் தகவல் அறிக்கையில் பணம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து இதர நகல்களை உயர் அதிகாரிக்கு அனுப்பி வைத்து ஒரு நகலை எனது புலன் விசாரணைக்காக எடுத்துக் கொண்டேன். **முதல் தகவல் அறிக்கை**

**அசா.ஆ.7 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 4.4.2025 ம் தேதி இரவு 20.30 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ஜெகநாதன் முகேஷ் குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **மாதிரி வரைபடம் அசா.ஆ.8 என்று குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் மெய்ஞானமூர்த்தி, கௌரி சங்கர் ஆனந்த் என்கின்ற ஆனந்தராஜ் ஆகியோரை தனித்தனியாக விசாரித்துவாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. பின்னர் கடையில் இருந்த சிசிடிவி கண்காணிப்பு கேமராவை உள்ள பதிவுகளை பார்வையிட்டும் அதில் உள்ள பதிவுகளை தரவிறக்கம் செய்ய QND CP+ என்ற கம்பெனி கேமராவில் தொழில்நுட்ப ஏஜெண்டாக உள்ள கார்த்திக் ராஜா என்பவரை காளியம்மன் அன் கோ சிசிடிவி கேமராக்களை பராமரித்து வருவதால் அவரை அதில் உள்ள பதிவுகளை தரவிறக்கம் செய்ய அவர் 63(4) ( C) BSA ன் படி சான்று பெற்று எதிரி திருடும் வீடியோ பதிவுகளை எந்த விதமான மாற்றம் செய்யாமல் 30 வீடியோக்களை கட் செய்து 30 வீடியோக்கள் அடங்கிய பிளக்ஸ்சோ 8 ஜிபி என்ற கேடிஎம் சில்வர் கலர் பென்டிரைவ் ஒன்றை எனக்கு ஆஜர்ப்படுத்தியதை நான் படிவம் 91 கைப்பற்றி சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். படிவம் 91 கைப்பற்றப்பட்ட பென் டிரைவை என நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பென் டிரைவ்வின் **படிவம் 91 அசா.ஆ.9 என குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்னர சம்பவ இடத்தில் கைவிரல் ரேகை தடய அறிவியல் துறைக்கு தகவல் தெரிவித்து பானுமதி விரல் ரேகை பிரிவு காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு அங்கு கிடைத்த விரல் ரேகை பதிவுகளை பதிவு செய்தோம். வாதி மெய்ஞானமூர்த்தி மற்றும் கடையில் பணிபுரிந்த நபர்களின் கைவிரல் ரேகைகளை மாதிரியாக எடுத்துச் சென்றார். அந்த விரல் ரேகை ஒப்பீடு செய்ததில் ஏற்கனவே குற்ற வழக்குகளில் சம்பந்தப்பட்ட எதிரி அஸ்கர் பாட்ஷா த/பெ. அப்துல் ஜாஃபர் என்பவரின் விரல் ரேகையுடன் ஒத்துப்போனதாக ஆய்வறிக்கை விவரத்தை தெரிந்து கொண்டேன்.

4. பின்னர் சம்பந்தப்பட்ட எதிரியை தேடி புலன் வைத்த போது 14.05.2025 ம் தேதி கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் உடுமலை – திருப்பூர் மெயின் ரோட்டில் சின்ன வீரன்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் பகல் 12.00 மணியளவில் கண்காணித்தபோது சந்தேகப்படும்படியாக நின்றிருந்த புகைப்படத்தில் இருந்த நபர்

தகவலாளி அடையாளம் காட்ட மேற்படி நபரை அருகில் சென்ற போது எங்களை கண்டதும் தப்பிக்க முயற்சி செய்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது முதலில் முன்னுக்கு பின் முரணாக கூறியவர் புகைப்படத்தை காட்டி விசாரித்த போது அந்த புகைப்படத்தில் இருப்பது நான் தான் என்று ஒப்புக்கொண்டவர் தனது சொந்த ஊர் காஞ்சிபுரம் மாவட்டம் என்றும் 04.04.2025 ஆம் தேதி அதிகாலை ஒரு மணி அளவில் உடுமலை டு பொள்ளாச்சி ரோட்டில் உள்ள காளியம்மன் அன்கோ கடையில் சுவற்றின் வழியாக ஏறி ஜன்னல் கம்பிகளை உடைத்து தம்பியை எடுத்துக் கொண்டு வந்து கீழ்த்தரத்தில் கிழக்கு முகமாக உள்ள ஷட்டரை நெம்பி உடைத்து கல்லாப்பெட்டியில் இருந்து ரூபாய் 19,000/- பணத்தையும், தலா 100 மில்லி அளவில் 158 எண்ணிக்கையிலான தங்க காசுகள் சுமார் இரண்டு பவுன் மற்றும் தலா ஒரு கிராம் வெள்ளி காசுகள் 75 எண்ணிக்கையில் 75 கிராம் திருடிக் கொண்டு கடைக்குள் வந்த வழியே வெளியே தப்பி சென்றதாகவும் கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட வரை கைது செய்து சாட்சிகள் மணிபாரதி, கௌரிநாதன் ஆகியோர் முன்னிலையில் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சி கையொப்பம் பெற்று எதிரி ஆஜர்படுத்திய களவு சொத்து 100 மில்லி அளவிலான 158 எண்ணிக்கை தங்க காசுகள் மற்றும் தலா ஒரு கிராம் வெள்ளி காசுகள் 75 எண்ணிக்கை ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசா.ஆ.10 என குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்னர் சாட்சிகள் மணிபாரதி கௌரிநாதன் ஆகியோரை விசாரித்து வாக்குமுலம் பதிவுசெய்தேன். பின்னர் எதிரியை திரேக பரிசோதனைக்கு பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலமாக கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அசா.ஆ.11 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் விரல் ரேகை நிபுணர் பானுமதி காவல் ஆய்வாளரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்**தேன்.பின்னர் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வீடியோ ஆதாரத்தில் உள்ள நபர் எதிரி தான் என்பதற்கான ஆதாரம் இல்லை என்றால் வீடியோ உள்ள நபர் அவர் தான்.

வழக்கின் சாட்சிகள் புகார்வாதியின் கடையில் வேலை செய்பவர்கள் என்றாலும் அவரதுநண்பர்கள் என்றாலும் ஆமாம், அவர் கடையில் இருந்தவர்கள் தான். சிசிடிவி கேமரா பதிவுகளை புகார்வாதி உங்களிடம் கொடுத்தார் என்றால் சரிதான். சிசிடிவி கேமரா பதிவுகளை கார்த்திக் ராஜா என்பவரிடம் கொடுத்து தான் சான்றிதழ் பெற்றுள்ளிர்கள் என்றால் சரிதான். வழககில் Hard disk எதுவும் கைப்பற்றவில்லை என்றால் ஆமாம்.

2. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் உள்ள துாரம் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் ½ கிமீ இருக்கும். சம்பவ இடத்திற்கு அருகில் நால் ரோடு சிக்னல் உள்ளது என்றாலும் அங்கு இரவு நேர காவலர்கள் இருப்பார்கள் என்றாலும் சரிதான். எதிரியை சம்பவ இடத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் ஆமாம்.
3. முதல் விசாரணையில் ரகசிய தகவலாளி என்று சொல்லியுள்ள நிலையல் அவரை பற்றி வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் ரகசிய தகவலாளி பற்றி காவல் ஆய்வாளரிடம் மட்டும் தான் சொல்ல வேண்டும் . வெளியில் சொல்ல வேண்டியது இல்லை. எதிரி மீது பல வழக்குஉள்ளதாக சொல்லியுள்ளநிலையில் எத்தனை வழக்கு உள்ளது என்றால் சிசிடிஎன்எஸ் – ல் நாங்கள் வழக்கு போடும் போது 13 வழக்குகள் இருந்தது. சிசிடிவி கேமராவில் உள்ள உருவத்தையும் எதிரியின் உருவத்தையும் உறுதி செய்து அடையாளம் காண தடயஅறிவியல் நிபுணரிடம் அறிக்கை பெற்றிர்களா என்றால் இல்லை.
4. ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட து என்றால் இல்லை. எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் எதிரியை கைது செய்த இடமான சின்னவீரன் பட்டியில் வைத்து தயாரிக்கப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் யாரால் டைப் செய்யப்பட்டதுஎன்றும் எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றும வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் லேப்டாப்பில் வைத்து டைப் செய்யப்பட்டது எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்று சொல்லவில்லை. களவு போனதாக வழக்கு சொத்தை அடையாளம் காட்டியது பட்டியல் சாட்சி 2 தனசேகரன் என்றால் பட்டியல் சாட்சி 1 உடன் 2 ம் உடன் இருந்தார். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல.
5. எதிரியை கைது செய்ய யார் யார் போனிர்கள் என்று வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். கம்பி வைதது நெம்பியதாக சொல்லியுள்ள நிலையில் கம்பியை கைப்பற்றவில்லை என்றால் கம்பி இல்லை, அதனால் கைப்பற்றப்படவில்லை. புகார் வாதி அந்த

கடையின் உரிமையாளர் என்று நிருபிக்க ஆவணம் வழக்கு கோப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவருடைய லைசென்ஸ் இருந்தது. லைசென்ஸ்ஸை வழக்கு கோப்பில் தாக்கல் செய்துள்ளிர்களா என்றால் இல்லை அது அவருடைய கடை தான். தங்க காசு வெள்ளி காசு ஆகியவைகள் புகார்வாதியின் உடையது என்பதை உறுதி செய்ய நகைகள் வாங்கிய கடையின் பில்கள் வழக்கு கோப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம், அவரது கடையின் டேக் இருந்தது.

6. நகைகளின் படிவம் 91ல் சாட்சியின் கையொப்பம் இல்லை என்றால் நாங்கள் கைப்பற்றும் போது அவர்கள் கையொப்பம் தேவையில்லை. உங்களுடைய பார்வை மகசரில் சம்பவ இடத்திலிருந்து சுமார் 40 அடி வடக்கே திருப்பதியின் மரக்கடை கிழக்கு பார்த்த உள்ளதாக உள்ள நிலையில் வரைபடத்தில் குறிப்பிட்ட பெயர் இல்லை என்றால் பார்வை மகசரில் உள்ளது. நிறைய மரக்கடைகள் அங்கு உள்ளது என்றால் ஒரு மரக்கடைதான் உள்ளது. உங்களுடைய பார்வை மகசரில் சம்பவ இடத்திலிருந்து சுமார் 20 அடி துாரத்தில் கிழக்கு பார்த்த உடைத்த ஷட்டர் உள்ளது என்ற நிலையில், வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் உடைக்கப்பட்ட இடத்தை காட்டியுள்ளோம். வழககிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. முகேஷ்குமார் என்பவரின் வாக்குமூலத்தில் கடைசியில் இருந்து 5 வது வரியில் பகல் 12.30 மணி என்றுள்ளது என்றால் கம்ப்யூட்டரில்தட்டச்சு பிழையாக இருந்திருக்கலாம்.வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல.

7. சொன்ன மாதிரி சொன்ன தேதியில் குற்ற செயல் நடைபெறவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல. வாதி அரசியல் பிரமுகர் என்றால் சரிதான். வாதி அரசியல் பிரமுகர் என்பதால் அவரிடம் இருந்து பொய்யான புகாரினை பெற்று எதிரி மீது குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளிர்கள் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. அவசர கதியில் வழக்கு ஆவணம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்து விட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்த தயாரிக்கப்பட்டது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.

**நீதித்துறை நடுவர் எண்.1**

**உடுமலைப்பேட்டை.**